LIBRARY
4 JUL 1959
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 31st October 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

Block Advisory Committees

* 731 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY (on behalf of Sri P. G. Manickam) : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவிலே எத்தனை பிளாக் டெவலப்மெண்டு அட்வைசரி கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இக்கமிட்டிகளிலே எந்தெந்தக் கமிட்டிகளிலே ஹரிஜனங்கள் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Sixteen.
(*b*) Ten.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பிளாக் டெவலப்மெண்ட் ஏரியாக்களை ஏற்படுத்தும்போது, அந்தந்த ஜில்லாக்களின் பிளானிங் கமிட்டியில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஏற்படுத்தப்படுகிறதா அல்லது சர்க்காரின் அபிப்பிராயப்படி ஏற்படுத்தப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கலெக்டர் அவர்களின் அபிப்பிராயத்தைக்கேட்டு அதன் பேரில் ஆலோசனை செய்து ஏற்படுத்தப்படுகிறது.

SRI R. KRISHNASAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, அட்வைஸரி கமிட்டிகளில் இருக்கும் மெம்பர்களின் எண்ணிக்கை என்ன ? இந்த எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கத்திற்கு ஏதாவது நோக்கம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not have the exact information with me now.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இதில் ஹரிஜனங்கள் என்பதில் அருந்ததியர்கள் என்பவர்கள் உட்படுவார்களா ? அப்படியானல் எத்தனை பேர்கள் இதில் இருக்கிறார்கள் ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI K. B. S. MANI : கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானியில் இருக்கும் அட்வைஸரி கமிட்டியில் ஹரிஜனங்களை நியமிக்கப்படாததற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பவானியிலுள்ள கமிட்டியில் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள்.